[1973 டிசம்பர் 4

கடவுளர் சிலை திருட்டுகள்

*627 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 ஆகஸ்டு மாதத்தில், மதுரை உததமபாளையத்தில் ஐம்பொன்னால் செய்யப்பட்ட பழங்கால சாமி சிலைகள் களவு போய் உள்ளதா?

(இ) ஆம் எனில், திருடு போன சிலைகள் எத்தனை?

(உ) அந்தச் சிலைகளின் விலை மதிப்பென்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) மூன்று.

(உ) ரூ. 2,00,000 (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்).

*628 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுகா, திருவிளக்குடி கோயிலில் அண்மையில் சாமி சிலைகள் திருட்டுப் போயினவா?

(இ) அதில் சம்பந்தப்பட்டவர்கள் யார், யார்? தண்டனை அடைந்தவர்கள் யார், யார்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) இத்திருட்டில் சம்பந்தப்பட்டவர்கள் மாயவரத்தைச் சேர்ந்த திருவாளர்கள் சக்கரபாணி, இராஜரத்தினம் என்ற இருவர். இவர்கள் இருவருக்கும் சிறைதண்டனை கொடுக்கப்பட்டது.

Sainik Schools

*599 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the number of Sainik Schools located in Tamil Nadu?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தில் உள்ள அமராவதி நகரில் ஓர் சைனிக் பள்ளி உள்ளது.